மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஒளவையார்.

Vol. V. | Madras : July 1903. | No. 5.

புத்தகம் ௫. | சென்னப்பட்டணம், 1903ஞு ஜுலைமீ | இல. ௫.

சமாசாரக் குறிப்பு.

ஒரு வருடாந்தரப் பத்திரிகை ஆர்டிக் மகாசமுத்திரத்திற்கு சமீபத்திலுள்ள கேப்பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்றவிடத்தில் வருடத்திற்கொருமுறை பிரசுரிக்கப்பட்டுவருகிறதாம்.

* * *

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் பட்டத்திற்கு வந்தபொழுது கிரேட் பிரிட்டனில் ஜனங்களில் 100-க்கு 40-க்குமேல் தங்கள் பெயரை எழுதத் தெரியாதாம். ஆனால் இப்பொழுது 100-க்கு 7 பேர்தான் அவ்விதம் எழுதத் தெரியாமலிருக்கிறார்களாம்.

* * *

குழந்தைபிறந்தவுடன் அதன் மூளை 10 அவுன்ஸ நிறையுள்ளதாக விருக்கும். ஒருவருடம் சென்ற பின்பு அது 2 பவுண்டிருக்கும்.

* * *

மிஸ்டர் கார்நீகி அவர்களுடைய வருடாந்தர வரும்படி 2,000,000 பவுண்டு. அதாவது ஒரு நிமிஷத்தில் 4 பவுண்டு, ஒருமணியில் 240 பவுண்டு. நமது தேசத்திலுள்ள சிலதனவான்கள் வீண்பெருமைக்கும் பேருக்கும் தங்

கள் பணத்தை செலவழிப்பது போலல்லாமல் தர்மமான விஷயத்தில் பணத்தை இவர் செலவழித்து வருவதுயாவருக்கும் தெரியும், இப்படியல்லவோ நம்மவர்களிருக்கவேண்டும்!

* * *

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் 7-ல் 1 மாது பூமியுடையவளாம். இவ்விதம் அங்கு 38,000 மாதர்கள் பூஸ்த் திதி யுடையவர்களாயிருக்கின்றார்கள்.

* * *

சுவிட்ஸர்லேண்டில் பசுமாடுகளுக்கு மணிகட்டுகிற வழக்கமுண்டு; காட்டில் இவைகளிருக்கும்பொழுது மணிசப்தம் கேட்டால் புலிகள் ஓடிப்போய் விடுமாம். இவ்விதமே ஹிமயப் பாவதசார்பிலும் செய்யப்பட்டு வருகிறதாம்.

* * *

ஒரு எரும்பின் அபாரசக்தி:—நமது பத்திரிகையில் எரும்பைப்பற்றி பல விஷயங்களை யெழுதியிருக்கிறோம். இப்பொழுது ஒருவர் ஒரு எரும்பையும் ஒரு கருப்பாம்பூச்சியையும் நிருத்ததில் சருப்பாம்பூச்சி எரும்பைவிட 60 மடங்கு அதிகமாம். எரும்பு கருப்பாம்பூச்சியை இழுத்துக்கொண்டுபோனதாம். 150 பவுண்டு பாரமுள்ள ஒருமனிதன் $4\frac{1}{2}$ டன் அல்லது 1200 பவுண்டு நிறையுள்ளசாமானைச் சுமக்கக்கூடும் ஒருஎரும்பும் ஒருமனிதனுக்குச் சமானமெனச் சொல்லப்படுகிறது.

* * *

பாடும்பூச்சிகள்:—ஜப்பான் தேசத்தில் ஓர்விதபூச்சிகள் இருக்கின்றனவாம். அவைகள் இவ்விடத்திலுள்ள மயினுக்குருவியைப்போல வெகுநன்றாகப் பாடுமாம், அவைகளை அத்தேசத்திலுள்ள சுமார் 3000 ஜனங்கள் காப்பாற்றி விலைக்கி விற்று ஜீவித்துவருகிறார்களாம்.

* * *

ஆம்பைன் என்ற பட்டணத்தில் ஒரு பிரபுயிருக்கிறாராம். அவருக்கு கைகளில்லையாம் ஆனல் கால்களால் வெகு நன்றாய் எழுதுகிறாராம், கால்களாலேதான் கத்தி கரண்டி முதலியவைகளை எடுத்து போஜனம் முதலியவைகளை வெகுநன்றாகசாப்பிடுகிறாராம்.

* * *

திமிங்கிலத்தின் மோவாய்க்கட்டையிலுள்ள எலும்பு 25 அடி நீளம். அதன்நாக்கிலிருந்து சுமார் 1 டன் எண்ணெய் எடுக்கப்படுகிறது.

* * *

கோயம்பத்தூரிலுள்ள கவர்ன்மெண்டு பெண்கள் பாடசாலை வெகுநன்றாக கட்டப்பட்டுவருகிறது. இது சிக்கிரத்தில் பூர்த்தியாய்விடும். அப்பொழுது அங்குள்ளவர்கள் தங்கள் குமாரத்திகளை அப்பாடசாலைக்கு அனுப்புவதுடன் சுயநலம் பாராட்டாமல் இதரர்களையும் தூண்டுவார்களென நம்புகிறோம்.

* * *

“இவ்வருஷம் விவாகங்கள் அதிகமாக நடக்கப்பட வில்லை. ஆனால் தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் வரதக்ஷணை வாங்கும் தொத்து வியாதி கோயம்புத்தூர் ஜில்லாவிலும் பரவியிருக்கின்றதைப் பார்க்க மிக வருந்துகிறோம். இவ்வியாதியை நீக்க ஒரு முக்கிய கமிஷனரும் 10 அல்லது 12 இன்ஸ்பெக்டர்களும், 20 அல்லது 25 ஓவர்சியர்களும் தேவையென” ஒரு நிருபர் தெரிவிக்கிறார். கோயம்புத்தூர் ஜில்லா சீர்திருத்தத்திற்குப்பேர்போனதென அநேகர் சொல்லுகிறார்கள். இது வாஸ்துவமோ பொய்யோ? வாஸ்துவமாயிருந்தால் வீண்பெருமைக்கும் பேருக்கும் அந்த ஜில்லா பாசாங்கு செய்துக் கொண்டு வந்திருக்கவேண்டும். இவ்வித பாசாங்கு எப்பொழுது நீங்கி அந்த ஜில்லா கண்ணிய முள்ளதா யிருக்குமோ?

முக்கிய நோட்டீஸ்.

நமது பத்திரிகைக்கு இடையூறுகள் அடிக்கடி சம்பவிக்கின்றன. இவைகள் நமக்கு மிக கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றன. ஆயினும் இனியாவது பத்திரிகையைக் கிரமமாகப் பிரசுரிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். நமது பத்திரிகை தாமதமாக வெளிவருவதைக்குறித்து வருந்தாத சந்தாதாரர்களில்லை. பத்திராதிபரும் மிக வருத்தப்படுவதும் தெரிந்த விஷயமே. நமக்கு பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள் பாக்கிப்பணத்தை அனுப்பினால் நமது பத்திரிகையை சரிவர நடத்த முடியும். நமது பத்திரிகைக்கு மிஸ்டர். T. முத்துராம பிள்ளையவர்கள் மானேஜராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடைய முயற்சியால் இனி நமது பத்திரிகை சரிவர பிரசுரிக்கப்படுமென்றே நம்புகின்றோம்.

நமது சந்தாதாரர்கள் பத்திரிகை விஷயமாகத் தெரிந்துக்கொள்ள வேண்டிய விஷயங்களுக்கு "மானேஜர், மாதர் மனோரஞ்சினி ஆபீஸ் திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவேண்டும். மணியார்டர் முதலியவைகளும் மானேஜர் பேருக்கே அனுப்பப்பட வேண்டும். பத்திராதிபருக்கு எழுதவேண்டியவர்கள் மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர், மாதர் மனோரஞ்சினி ஆபீஸ் திருவல்லிக்கேணி, சென்னை என்று தான் எழுதவேண்டும். பத்திரிகைகள், புஸ்தகங்கள், நிரூபங்கள் முதலியவைகளும் பத்திராதிபர் பேருக்கே அனுப்பப்படவேண்டும்.

16164

C. S. இராமசுவாமி ஐயர்,
எடிடர் அண்டு ப்ரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சினி.

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிக்கை.

நமது பத்திரிகைக்கு பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடிய சீக்கிரத்தில் தங்கள் பாக்கி தொகையை அனுப்புவார்கள் என்று நம்புகிறோம். பத்திராதிபருக்கு நேரிட்டிருக்கும் கடனை இதைக்கொண்டு தான் அடைக்கவேண்டும்.

T. முத்துராம பிள்ளை. மானேஜர்.

விடுகதைகள்.

1. கைகளுண்டு, ஆயின் வேலைசெய்ய விரல்களில்லை; கழுத்துண்டு ஆயின் அதின்மேலுள்ள முகமில்லை; மானிடரை விழுங்கவல்ல வயிறுண்டு, ஆயின் விழுங்கினதை ஜீரணம்செய்ய சக்தியில்லை கழுத்தே யதின் வாயாகும். கருத்தறிந்து இதன் பொருளியம்புவீரே.

2. அது விருக்ஷத்தை யொத்தது; பலசாகைகளுள்ளது; பத்திரங்களும் அனேகமுள; பத்திரங்களிலுள்ள நரம்பு இரேகைகளை இவைகளிடத்தும் காணலாம். விருக்ஷமோ நின்றவிடம்செழித்துப் போற்றுவாருக்கு நிழலளித்துப் பலனளித்துதவும்; ஆயின் விருக்ஷத்தையொத்த இதுவோ உலகமெலாமுலாவிச்சென்ற விடமெல்லாம் சீராக்கிப் பெருமையாக்கிப் பேரானந்தத்தை விளைவிக்கும். இதுயாதெனக் கூறவீர் நீவிர்.

ஓர்மாது.

Printed & published by P. MUNNULAUL LALAH, at the GUARDIAN PRESS, MOUNT ROAD, for the Proprietor C. S RAMASAWMY IYER, TRIPLICANE, MADRAS.

Y15m211, M99M0